அனகாபுத்தூர் நகராட்சி

செங்கற்பட்டு மண்டலம்

# நிர்வாக அறிக்கை

# 2018- 2019

# <u>அனகாபுத்தூர் நகராட்சி</u>

## <u>2017 – 2018ம் ஆண்டு நிர்வாக அறிக்கை</u>

### <u>1. தோற்றம்</u>

அனகாபுத்தூர் மூன்றாம் நிலை நகராட்சியானது 09.08.2010ம் தேதிய நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 154ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

1. நகராட்சியின் பரப்பளவு சுமார் 4.00 சதுர கிலோ மீட்டராகும். நடப்பு ஆண்டில் நகராட்சியின் பரப்பளவு கூடுதலோ குறைவோ ஏதுமில்லை.

2. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணகெடுப்பின்படி நகராட்சியின் மக்கள் தொகை 48050 ஆகும். இதில் ஆண்கள் 24158 பெண்கள் 23892 ஆகும்.

1991 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு ஏற்ப 11.06.1996ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, அரசு ஆணை எண் 135 ன்படி உறுப்பினர் எண்ணிக்கை 10 லிருந்து 18 ஆக உயர்த்தப்பட்டது. அதன்படி நகராட்சி கீழ்க்கண்டவாறு 18 வார்டுகளாக பிரிக்கப்பட்டு, கீழ்கண்டவாறு வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| வார்டுகளின் எண்ணிக்கை | .... | 18 |
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | .... | 2 (வார்டு எண். 8, மற்றும் 14 ) |
| பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | .... | 5 (வார்டு 2, 4, 6, 9, மற்றும் 11 ) |

### <u>2. நகர மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவி காலம் 24.10.2016ல் முடிவடைந்துவிட்டது.</u>

25.01.2016 மன்ற பொருள் தனி அலுவலர் மூலம் நிர்வாகிக்க அரசாணை எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.10.2016ன்படியும், தமிழ்நாடு அரசிதழ் எண்.250, நாள்.24.10.2016–ன்படியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 375B-ன்படி, அனகாபுத்தூர் நகராட்சிக்கு நகராட்சி ஆணையரை தனிஅலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளதையடுத்து நகராட்சி ஆணையர் திருமதி.மல்லிகாராஜேந்திரன் தனிஅலுவலர் பொறுப்பினை 25.10.2016 முற்பகல் முதல் ஏற்றுக்கொண்டார்

## 3. அலுவலர்கள்.

| | | |
|---|---|---|
| 1. ஆணையர் | .... | திருமதி. மல்லிகாராஜேந்திரன் 01.04.2017 முதல் 31.03.2018 வரை) |
| 2. நகராட்சி பொறியாளர் | .... | திரு.ஏ.டி.ஆசீர்வாதம் (01.04.2017 முதல் 31.03.2018 வரை) |

## நகர் மன்றக் கூட்டங்கள்

சாதாரணமாக மாதம் ஒரு முறை சாதாரணக் கூட்டமும், அவ்வப்போது தேவைக்கேற்ப அவசரக் கூட்டமும், சிறப்புக் கூட்டமும் – 4 சாதாரணக்கூட்டம் –16 நடைபெறும், நடப்பு ஆண்டில் 20 கூட்டங்கள் நடத்தப்பட்டன. கூட்டத்திற்கு வைக்கப்பட்ட பொருள்கள் முடிக்கப்பட்ட பொருள்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | கூட்டத்தில் வைக்கப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை | .... | 284 |
| 2. | கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை | ..... | 284 |
| 3. | முடிவு செய்யப்படாத பொருள்களின் எண்ணிக்கை | ..... | 0 |

## 4. பணி நிர்வாகம்

இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட 45 பணியிடங்களில் நகராட்சி பொறியாளர் உள்ளிட்ட இதர பணியாளர்கள் 2017–18ம் ஆண்டில் 43 நபர்கள் பணி புரிந்தனர். பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் பிற பயன்பாடுகளின் செலவு – 122.28 இலட்சம்.

இந்நகராட்சிகளில் கீழ்க்கண்ட பிரிவுகளின் மூலம் நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 1. பொது பிரிவு :

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆணையாளர். | – 1 | எண்ணிக்கை |
| 2. | மேலாளர் | – 1 | எண்ணிக்கை |
| 3. | உதவியாளர் | – 1 | எண்ணிக்கை |
| 4. | இளநிலை உதவியாளர் | –3 | எண்ணிக்கைகள் |
| 5. | பதிவுரு எழுத்தர் | – 1 | எண்ணிக்கை |
| 5. | அலுவலக உதவியாளர் | – 1 | எண்ணிக்கை |
| 6. | இரவு காவலர் | – 1 | எண்ணிக்கை |

**2. பொறியியல் பிரிவு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | நகராட்சி பொறியாளர் | – 1 | எண்ணிக்கை |
| 2. | பொது பணி மேற்பார்வையாளர் | – 1 | எண்ணிக்கைகள் |
| 3. | பணி ஆய்வர் | – 1 | எண்ணிக்கை |
| 4. | பொருத்துநர் (நிலை–2) | – 1 | எண்ணிக்கை |
| 5. | வால்வு இயக்குபவர் | – 1 | எண்ணிக்கைகள் |
| 6. | மின்பணியளார் (நிலை–2) | – 1 | எண்ணிக்கை |
| 7. | தெருவிளக்கு உதவியாளர் | – 1 | எண்ணிக்கைகள் |
| 8. | ஈப்பு ஓட்டுநர் | – 1 | எண்ணிக்கை. |

**3. வருவாய் பிரிவு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | வருவாய் ஆய்வர் | – 1 | எண்ணிக்கை |
| 2. | வருவாய் உதவியாளர் | – 2 | எண்ணிக்கைகள் |

**4. நகரமைப்பு பிரிவு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | நகரமைப்பு ஆய்வர் | – 1 | எண்ணிக்கை |

**5. பொது சுகாதார பிரிவு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | துப்புரவு ஆய்வாளர் | – 1 | எண்ணிக்கை |
| 2. | துப்புரவு மேற்பார்வையாளர் | – 1 | எண்ணிக்கைகள் |
| 3. | ஓட்டுநர் | – 1 | எண்ணிக்கைகள் |
| 4. | துப்புரவு பணியாளர் | – 21 | எண்ணிக்கைகள் |

**6. மின் ஆளுமை**

| | | | |
|---|---|---|---|
| 1. | புள்ளி விவரக்குறிப்பாளர் | – 1 | எண்ணிக்கை |

மேற்படியாக இந்நகராட்சியில் பணியிடங்கள் உள்ளது. மொத்தமுள்ள 45 பணியிடங்களில் 43 நபர்கள் இந்நிதியாண்டில் பணிபுரிந்து வருகின்றனர்.

## இடவசதி

இந்நகராட்சிக்கு புதியதாக அலுலவக கட்டிடம் 2008-09ம் ஆண்டு ரூ.50.00 இலட்சத்தில் மதிப்பிட்டில் பகுதி –II திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இதில் பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.30.00 இலட்சமும், பொதுநிதியில் ரூ.20.00 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

## 5. பொறியியல் பிரிவு

01.04.2011ல் ஒரு நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஒரு பொதுப்பணி மேற்பார்வையாளர் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் பொறியியல் பிரிவில் குடிநீர் பராமரிப்பு பணிக்கான 1 பிட்டர், மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக 1 மின் பணியாளர் மற்றும் 1 மின்பணி உதவியாளர் பணிபுரிந்து வருகின்றனர்.

## சாலைகள் மேம்பாலங்கள் திட்டங்கள்

இந்நகராட்சியின் வழியே செல்லும் குன்றத்தூர் பல்லாவரம் பிரதான சாலை நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. 01.04.2019ம் தேதி அன்று நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் விவரம் பின் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிமெண்ட் கான்கிரிட் சாலை | .... | 21.640 கி.மீ |
| 2. | தார் சாலை | .... | 18.699 கி.மீ |
| 3. | கல் சாலை | .... | 2.023 கி.மீ |
| 4. | மண் சாலை | .... | 1.733 கி.மீ |
| 5. | பேவர் பிளாக் சாலை | .... | 0.495 கி.மீ |
| | **மொத்தம்** | .... | **44.590 கி.மீ** |

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி.

1. அனகாபுத்தூர் நகராட்சியில் 2018–19ம் ஆண்டு (MLA Fund 2018-19) சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.56.29 லட்சம் மதிப்பிட்டில் 2 RO பணிகள், 1 நியாய விலை கட்டிடம் கட்டுதல் மற்றும் 3 சிறு மின் விசை மோட்டார் பொருத்தும் பணி மொத்தம் 5 பணிகள் தேர்வு செய்யப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றன.

**<u>பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி.</u>**

1. அனகாபுத்தூர் நகராட்சியில் **2018–19**ம் ஆண்டு (MP Fund 2018-19) பாாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.**14.00** லட்சம் மதிப்பிட்டில் **2** உயர்மின் கோபுர விளக்கு அமைக்கும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றன.

**<u>சாலை மேம்பாட்டு திட்டம்</u>**

தமிழ்நாடு நகர்ப்புர சாலை மேம்பாட்டு திட்டம் **2018–19**ம் ஆண்டில் இந்நகராட்சி மூலம் **1.368** கி.மீ சிமெண்ட் சாலை மற்றும் **5.78** கி.மீ தார் சாலை ரூ.**500.00** இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து கொள்ளப்பட்டு தற்போது அனைத்து பணிகளும் முடியும் தருவாயில் உள்ளது.

**<u>ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம்</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் **2018–19**ம் ஆண்டு மேற்கண்ட திட்டத்தில் ரூ.**114.00** இலட்சத்தில் **1.19** கி.மீ நீளத்திற்கு மூடியுடன் கூடிய வடிகால் பணி தேர்வு செய்யப்பட்டு பணி முடியும் தருவாயில் உள்ளது.

**<u>தெரு விளக்குகள்</u>**

அனகாபுத்தூர் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கென **1** மின் பணியாளர் மற்றும் **1** மின்பணி உதவியாளர் பணிபுரிந்து வருகின்றார். நகராட்சி பகுதிகளில் உள்ள தெரு விளக்குகளை தனியார் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் தெரு விளக்குகள் பராமரிப்பு கட்டணம் ரூ.**32.78** மின்கட்டண செலவினம் ரூ.**34.78** இலட்சம் ஆகும். ஆக மொத்தம் அறிக்கையாண்டில் ரூ.**67.56** செலவினம் செய்யப்பட்டுள்ளது.

அனகாபுத்தூர் நகராட்சியில் **2018–19** அறிக்கையாண்டில் கீழ்கண்டவாறு தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | குழல் விளக்குகள் | ..... | 681 |
| 2. | 250 சோடியம் ஆவி விளக்குகள் | ..... | 393 |
| 3. | உயர் மின் கோபுர விளக்கு | ..... | 49 |
| 4. | 3*36 சி.எப்.எல் விளக்கு (CFL Light) | ..... | 882 |
| 5. | 70W LED Lilght | ..... | 94 |
| | **மொத்தம்** | ..... | **2099** |
| 6. | அலுவலக கட்டிடத்தில் குழல் விளக்குகள்.. ( CFL & 40 w Tube light ) | | 295 |

| | | | |
|---|---|---|---|
| 7. | சமுதாய கூடம் 40W LED Lilght | ..... | 75 |
| | **மொத்தம்** | ..... | **370** |

## <u>குடிநீர் விநியோகம்</u>

அனகாபுத்தூர் நகராட்சி சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மூலம் நாளொன்றுக்கு 1.00 லட்சம் லிட்டர் மற்றும் செங்கழுநீர்மலை கல்குவாரி மூலம் 10.00 லட்சம் லிட்டர் பெறப்பட்டு 3 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், மூன்று தரை மட்ட நீர்தேக்கத் தொட்டி மற்றும் 2 குடிநீர் டேங்கர் லாரிகள் மூலமும், நகராட்சி பகுதியின் உள்ளூர் நீர் ஆதாரத்தைக் கொண்டு 15.30 இலட்சம் லிட்டர் ஆக மொத்தம் 26.30 லட்சம் லிட்டர் குடிநீர் பொதுமக்களுக்கு நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 55 LPCD லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் , நகரில் உள்ள பொது மக்களுக்கு தினமும் குடிநீர் வழங்கும் பொருட்டு குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.18.08 லட்சம் மதிப்பீட்டில் சென்னை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் முடிவுற்றவுடன் தினமும் ஒரு நபருக்கு 90 லிட்டர் குடிநீர் பொது மக்களுக்கு வழங்கப்படும்.

## <u>திடக்கழிவு மேலாண்மை திட்டம்</u>

அனகாபுத்தூர் நகராட்சியின் 19 துப்புரவு பணியாளர்களை கொண்டு நகரம் முழுவதும் தூய்மைபடுத்த இயலாத நிலையில் வார்டு எண். 1 முதல் 18 வரை கால்வாய் சுத்தம் செய்யும் பணிகளுக்கு நகராட்சி துப்புரவுப் பணியாளர்களை கொண்டு பணிசெய்யப்பட்டுவருகிறது. இதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1 முதல் 18 வரையில் உள்ள வார்டுகளில் குப்பைகள் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் வீட்டுக்கு வீடு (Door to Door Collection) மற்றும் 100 சதவீதம் தெருக்கள் கால்வாய்களில் சேகரமாகும் குப்பைகள் அன்றாடம் சேகரிக்கப்பட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 2 எண்ணம் பசுமை உரக்கிடங்கில் உரம் தயாரிக்கப்படுகிறது. அறிக்கையாண்டில் பொது சுகாதாரத்தை பேணும் பொருட்டு அடிப்படை வசதிகளில் நன்றாக துப்புரவு பணி மேற்கொள்ளும் வகையில் ரூ. 200.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி அனகாபுத்தூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் – 2016ன் படி அனகாபுத்தூர் நகராட்சி துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டது.**

## பொது சுகாதாரம்

பொது சுகாதாரப் பணிகள் மேற்பார்வை செய்ய 1 துப்புரவு ஆய்வாளர் மற்றும் 1 துப்புரவு மேற்பார்வையாளர் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் கீழ் 19 துப்புரவு பணியாளர்கள் அறிக்கையாண்டில் பணிபுரிந்து வந்துள்ளனர். தனியார் மூலம் ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் 120 நபர்களும் 6 துப்புரவு மேற்பார்வையாளர்களும் பணியாற்றி வருகிறார்கள். அனகாபுத்தூர் நகராட்சியில் பொது மக்களின் பொது சுகாதாரத்தை பேணிக் காக்கும் பொருட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அனகாபுத்தூர் நகராட்சியில் பொது சுகாதாப் பணிக்கென கீழ்க்கண்ட வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | டிராக்டர்(அலுவலக ஊர்தி) | 1 எண்ணிக்கை |
| 2. | தள்ளு வண்டிகள் | 30 எண்ணிக்கை |
| 3. | டிராக்டர் (அக்ரோ கூட்டுறவு சங்கம் மூலம் ஒப்பந்த ஊர்தி) | 4 எண்ணிக்கை |
| 4. | கொசு மருந்து அடிக்கும் பணிக்கு டாடா ஏசி (அக்ரோ கூட்டுறவு சங்கம் மூலம் ஒப்பந்த ஊர்தி) | 1 எண்ணிக்கை |
| 5. | மன் வாரி இயந்திரம் (JCB ) | 1 எண்ணிக்கை |
| 6. | மின்டிப்பர் லாரி | 1 எண்ணிக்கை |

மேற்கண்டவாகனங்களுக்கான பராமரிப்பு செலவினம், மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 6 ஓட்டுநர்கள் 2 கீளினர் ஊதியம் , வாகன எரிபொருள் செலவினம் மொத்தம் அறிக்கையாண்டில் ரூ.60.00 இலட்சம் ஆகும். மேலும் பொது சுகாதார பணிக்கு தளவாட பொருட்கள், கொசு ஒழிப்பு வாகனம் ஒப்பந்த அடிப்படையில் வாடகை , கொசு ஒழிப்புபணி செய்ய கொசு ஒழிப்பு உபகரணங்கள், மருந்துகள் வாங்க மற்றும் 41 கொசு ஒழிப்பு பணியாளர்களின் ஊதிய செலவினங்கள் மொத்தம் அறிக்கையாண்டில் ரூ. 66.92 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## பிறப்பு இறப்பு பதிவு

அனகாபுத்தூர் நகராட்சியில் 2017ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு இறப்புகள் விவரம் கீழ்க்கண்டவாறு.

| | |
|---|---|
| பிறப்பு | 11 |
| இறப்பு | 199 |

இறந்து பிறந்தவை 0

## தெரு நாய்கள் கருத்தடை

அனகாபுத்தூர் நகராட்சியில் அறிக்கையாண்டில் புளூ கிராஸ் ஆப் இந்தியா அமைப்பின் மூலம் 134 தெரு நாய்கள் பிடிக்கப்பட்டு கருத்தடை செய்யப்பட்டது. மேற்படி பணிக்கான செலவினம் ரூ.93800/– ஆகும்.

## தீவிர துப்புரவு பணி

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் வார ஒருமுறை சுழற்சி முறையில் தீவிர துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டும், கால்வாய் ஓரங்களில் வளர்ந்து உள்ள செடிகள் , முற்புதர்கள், அகற்றப்பட்டு மழைநீர் வடிகால்கள் தூர் வாரப்பட்டும் மழைகாலங்களில் நீர் தேங்காவண்ணம் அடைப்புகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை கண்காணிக்க 6 துப்புரவு பணியாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் மூன்று வார்டுகள் வீதம் பணி மேற்பார்வையிட ஒதுக்கீடு செய்யப்பட்டடு பணி செம்மையாக நடைபெற்றுவருகிறது.

## தூய்மை இந்தியா திட்டம் ( IHHL)

அனகாபுத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் சுகாதார திட்டத்தில் 164 பயனாளிகளுக்கு மத்திய அரசின் பங்களிப்பு ரூ.6.56, மாநில அரசின் பங்களிப்பு ரூ.3.28 மற்றும் நகராட்சியின் பங்களிப்பாக ரூ.3.28 இலட்சம் ஆகமொத்தம் ரூ.13.12 இலட்சம் அறிக்கையாண்டில் செலவிடப்பட்டுள்ளது.

மேலும் இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் 5 சமுதாய கழிப்பிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 5 சமுதாய கழிப்பிடம் கட்டி பொது மக்கள் பயன்பாடில் உள்ளது. மாநில நிதி மான்யம் ரூ.11.38 மத்திய நிதி அரசின் மான்யம் ரூ.13.00 மற்றும் நகராட்சியின் பங்களிப்பு ரூ.25.63

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ஒரு மேற்பார்வையாளர், 5 பரப்புரையாளர்கள் நியமிக்கப்பட்டு அனகாபுத்தூர் நகராட்சியில் கணக்கெடுப்பு செய்யப்பட்டதால் 13736 வீடுகள் என கண்டறியப்பட்டுள்ளது. அவற்றுள் தனிநபர் கழிப்பிடம் இல்லாத 79 குடியிருப்புகளுக்க புதியதாக தனி கழிப்பிடம் கட்ட பணி உத்தரவு வழங்கப்பட்டது.

## விழிப்புணர்வு முகாம்

அனகாபுத்தூர் நகராட்சியில் பொது மக்களுக்கு குடிநீரைச் சிக்கனமாக பயன்படுத்தவும், காய்ச்சி பருகவும், சிக்கன் குனியா, பன்றிக் காய்ச்சல், டெங்கு காய்ச்சல் போன்ற நோய்கள் பாதிக்காத வண்ணம் , திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்த்தலும், டிஜிட்டல் பேனர்கள் அனைத்து வீடுகளுக்கும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியாக பிரித்து வழங்கத்தக்க வகையில் இரு பைகளில் தனித்தனியாக அச்சடிக்கப்பட்டு அனைத்து வீடுகள், கடைகள், வணிக நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டதற்கு ரூ.3.80 லட்சம் அறிக்கை ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது. மேலும் சுவர் விளம்பரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தியும் தனி நபர் கழிப்பிடங்களை பயன்படுத்துதல் குறித்து மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் விழிப்புணர்வும், துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. அறிக்கையாண்டில் ரூ.19.24 லட்சம் செலவிடப்பட்டது. மேலும் இவை குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டது.

மேலும், 50 மைக்ரானுக்கு குறைவாக உபயோகிக்கப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தற்கும், காலரா போன்ற நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு, பன்றிகளால் ஏற்படும் நோய்கள் பற்றி நாடகங்கள் வாயிலாக அனகாபுத்தூர் நகராட்சியின் குடிசைப் பகுதிகளில் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் கொசுக்களினால் பரவும் நோய்களைத் தடுக்கும் விதமாக களப்பணியாளர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் கொசுப்புழு ஒழிப்பு மருந்து தெளிக்கப்பட்டும், கழிவு நீர் கால்வாய்களை மொத்தம் 5.08 கீ.மீ துரத்திற்கு தூர்வாரப்பட்டும், சுத்தம் மற்றும் கழிவுநீர் நீர்நிலைகளுக்கு செல்லாமல் தடுக்கவும் நலசங்கங்கள், திருமணமண்டபங்கள், உணவகங்கள் போன்றவற்றில் விழிப்புணர்வு கூட்டங்கள் மற்றும் பேனர்கள் வைத்து மக்களிடையே விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. மொத்தத்தில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

## <u>மாநில நிதி ஆணை பரிந்துரை</u>

2017–18 அறிக்கையாண்டில் மாநில நிதி ஆணையம் மூலம் வழங்கப்பெறும் மாநில நிதிப் பகிர்வு மான்யம் ( Devolution Fund ) மூலம் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர நிர்வாக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது.

2017–18 ம் நிதியாண்டில் பொது நிதிக் கணக்கில் ஆரம்ப இருப்பாக ரூ.111.86 இலட்சம் உள்ளது. வரவாக ரூ.204.29 இலட்சம் பெறப்பட்டுள்ளது. ஆகமொத்தம் ரூ.316.15.

அறிக்கையாண்டில் மொத்த செலவினம் ரூ.137.16 இலட்சம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதி இருப்பாக ரூ.178.99 உள்ளது.

**LOAN OUTSATNDING BALANCE AS ON 31.03.2018**

| S.No. | Name of the Lending Agency | Scheme No. | Openeing Balance as on 01.04.2017 | | Receipts duirng the Year | Repayment Due for the Year | | Actual Repayment for the year | | Balance as on 31.03.2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Principal | Interest | | Principal | Interest | Principal | Interest | Principal | Interest |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| | | | | | | | | | | | |
| 1 | TUFIDCO | MEGA CITY | 732693 | 0 | 0 | 422676 | 16844 | 422676 | 16844 | 310017 | 0 |
| | | | | | | | | | | | |
| 2 | TUFIDCO | INFRASTRUCTURE FUNDING SCHEME | 189512 | 0 | 0 | 167068 | 10783 | 167068 | 10783 | 22444 | 0 |
| | | | | | | | | | | | |
| | | **TOTAL** | **922205** | **0** | **0** | **589744** | **27627** | **589744** | **27627** | **332461** | **0** |

## பொது

நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பிறகு நகராட்சியில் வருவாயை பெருக்க சொத்துவரி பெயர் மாற்றம், புதிய வரி விதிப்பு விண்ணப்ப கட்டணங்கள், கட்டிட உரிமம் விண்ணப்ப கட்டணங்கள் மூலம் பலவகைப்பட்ட வரவினங்கள் வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 321 ( 3 ) ( b ) ன்படி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை கட்டணம் திருத்தியமைக்கப்பட வேண்டும். ஏற்கனவே திருத்தியமைக்கப்பட்டுள்ள கட்டணம் முன்றாண்டுகள் கடந்து விட்டப்படியால் , நகராட்சி வருவாயினை உயர்த்த தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 321 ( 2 ) மற்றும் 329 ன் கீழ் கீழ்கண்டுள்ளபடி திருத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணங்களை 01.11.2017 முதல் நடைமுறைப்படுத்தி வருவாய் பெருக்கவும் நகராட்சி நிதி நிலைமை உயர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

பொது சுகாதாரத்தினை மேம்படுத்திட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி அனகாபுத்தூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் – 2016ன் படி அனகாபுத்தூர் நகராட்சி துணை விதிகள் ஏற்படுத்தப்படுகிறது.

பிளாஸ்டிக் கழிவுகள் தொடர்பான வரையரைகள் மற்றும் குப்பைகளை தரம்பிரித்து வீடுகளிலிருந்து பெற்றிட கட்டணங்கள் வசூலிக்க துணை விதிகள் மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி தனது வருவாயை பெருக்கவும் பொது சுகாதார செலவுகளை மேற்கொள்ளவும் ( User Charges ) சேவை கட்டணம் ஜுலை 2017 முதல் கட்டணம் வசூலிக்கப்பட்டுவருகிறது.

இந்நகராட்சி பகுதிக்கு இரண்டு எண்ணிக்கையிலான Mircro Compost Centre (MCC ) நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கப்பட்டு குப்பைகளை மக்கும் குப்பை மக்காத குப்பையை தரம் பிரித்து மக்கும் குப்பையை உரம் தயாரிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு இலவசமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

அறிக்கை ஆண்டில் திட்டப்பணிகள், மற்றும் பொது நிதியின் திட்டத்தின் கீழ் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. பல்வேறு நல திட்டப் பணிகளை இந்நகராட்சிக்கு அனுமதித்ததற்காக தமிழ்நாடு அரசுக்கும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கும் இதர அரசு துறையினருக்கும் உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நிர்வாகம் சிறப்பாகவும், ஆக்கபூர்வமாகவும் செயல்பட உறுதுணையாய் இருந்த முன்னால் நகர் மன்றத் தலைவர், நகர் மன்றத் துணைத் தலைவர், மற்றும் உறுப்பினர்களுக்கும்

மேலும் தனி அலுவலராக பொறுப்பு ஏற்ற நாள் முதல் அனைத்து ஒத்துழைப்பினையும் நல்கும் நகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையர்
அனகாபுத்தூர் நகராட்சி.